**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**
**அசல் வழக்கு எண். 166/2017**

23.04.2024

**<u>வா.சா.1 ராமாமிர்தம் க/பெ.செல்லத்துரை அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 14 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

வழக்கு சொத்தில் 47 குழி பெரியசாமி என்பவர் வாங்கியுள்ளார். அதை விற்றது போக மீதியை 1, 3 பிரதிவாதிகள் மீதி இடம் வைத்துள்ளார்கள். நான் அசேஷம் கிராமத்தில் வசித்து வருகிறேன். பெரியசாமி என்பவர் எனக்கு உறவினர் தான் என்றும் இவ்வழக்கிற்காக மாற்றி உறவினர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் பெயர் சேவு என்பதற்கும் சேவு (எ) பெரியான் முத்துராஜா என்பதற்கும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் வம்சாவழி பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு அதனை நிருபிப்பதற்கும் எந்த ஒரு ஆவணச்சான்றும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பெரியசாமி அவர் கிரயம் பெற்ற சொத்திற்கும் அவர் பெயரில் வருவாய்துறையில் பெயர்மாற்றம் செய்து கொண்டும், அவர் கிரயம் பெற்ற சொத்திற்கு வீட்டிற்கு அவர் பெயரில் மின் இணைப்பை மாற்றிக்கொண்டும் அனுபவித்து வருகிறார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை பொறுத்து கூட்டு அனுபவத்தில் இருப்பதாக கண்டு வழக்கை மதிப்பிட்டிருப்பது தவறானது. கூட்டு அனுபவத்தில் இல்லாததால் தான் வழக்கு சொத்தை யார் அனுபவித்து வருகிறார் என்று எனக்கு தெரியாது என்று கூறுகிறேன் என்றால் எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரங்களுக்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து செய்தித்தாளில் பொது அறிவிப்பு எதுவும் அளிக்கவில்லலை என்றால் சரியல்ல. வாதியாகிய எனக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் வழக்கு சொத்தில் பாகவீதம் எதுவும் இருந்திருந்தால் அதற்குண்டான ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்திருப்போம். அவ்வாறு இல்லாததால் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 14 ம் பிரதிவாதி அவர் நல்லெண்ணத்தின்பால் கிரயம் பெற்ற கிரயதாரர் ஆவார். அவர் கிரயம் பெற்ற கிரய ஆவணத்தை பொறுத்து எந்தவித பரிகாரமும் கோராமல் வழக்கில் தரப்பினராக சேர்த்திருப்பது சரியல்ல என்றால் தவறு. அதனால் இந்த வழக்கு 14 பிரதிவாதிக்கு எதிராக தள்ளுபடி செய்வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– திருமதி. ராமாமிர்தம்

Sd/– திரு. கே. சக்திவேல்,
சார்பு நீதிபதி, மன்னார்குடி.